**மாகாண வீதிகள் செயற்திட்டம் - (கிழக்கு மாகாணம்) -2013**

மாகாண வீதிகள் செயற்திட்டத்தின் - (கிழக்கு மாகாணம்) 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) சர்வதே அபிவிருத்திச் சங்கத்திற்கும் (ஐடிஏ) இடையில் கைசாத்திட்ட 2010 சனவரி 11 ஆம் திகதிய 4630 எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 4.09(ஆ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன

மாகாண வீதிகள் செயற்திட்டத்தின் நிதியளிப்பு உடன்படிக்கையின்படி, கிழக்கு மாகாண சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளதுடன் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிவைறவேற்றல் முகவராக உள்ளது. அபிவிருத்தி செய்யப்பட்ட வீதி உட்கட்டமைப்பின் நிலைபேறான முகாமைத்துவத்தின் ஊடாக பெறுனரின் கிழக்கு மாகாணத்திலுள்ள சமூக பொருளாதார நிலையங்களிற்கான நுழைவு வழிகளை மேம்படுத்துவதே செயற்திட்டத்தின் பிரதான குறிக்கோளாக உள்ளது. செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின்படி, செயற்திட்டத்தின் - (கிழக்கு மாகாணம்) மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ஐ.அ.டொலர் 20 மில்லியனாக உள்ளதுடன் முழுத் தொகையும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் (ஐடிஏ) நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2010 மார்ச் 31 இல் தொடங்கியிருந்ததுடன் 2015 மார்ச் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது.

## 1.3 நிதிசார் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய பிறள் கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம்,

கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்ககான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வின் நொக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்று நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பீடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள் சொத்துக்கள், பொறுப்புக்கள், கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப் பட்டிருந்தனவா என்பதும்,

(உ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) நிதிக் கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

**3. அபிப்பிராயம்**

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 5.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போதான விசேட (டொலர்) கணக்கிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான மீள் நிரப்பல்களும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப் பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்களானவை (எஸ்ஓஈஎஸ்) நிதியளிப்பு உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) நிதியளிப்பு உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதி கட்டுப்பாடுகளுடன் இணங்கப்பட்டிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4 நிதிக் கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

கணக்காய்விற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் தகவல்களின்படி, மீளாய்வாண்டிற்கான செயற்திட்ட செலவினம் ரூபா 1,076,744,254 ஆனதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 1,853,570,991 ஆக இருந்தது. மீளாய்வாண்டிற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பு பின்வரும் கூற்றில் காட்டப்படுகின்றது.

| செலவின வகை | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2013 | 2012 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| சிவில் வேலைகள் | 884,669,580 | 445,332,808 | 1,546,905,413 |

| | | | |
|---|---|---|---|
| தளபாடங்களும் பொருத்திகளும் | 34,740 | - | 885,440 |
| அலுவலக உபகரணங்கள் | 267,520 | 2,290,312 | 3,054,448 |
| ஆலோசனை சேவைகள் | 169,503,237 | 57,980,410 | 268,657,783 |
| அதிகரிக்கும் மற்றும் செயற்பாட்டுக் கிரயம் | 22,269,177 | 11,250,537 | 34,067,907 |
| மொத்தம் | 1,076,744,254 | 516,854,067 | 1,853,570,991 |

## 4.2 விசேட (டொலர்) கணக்கு

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப் பெற்ற தவல்களின்படி, மீளாய்வாண்டின் போதான செற்திட்டத்தின் விசேட (டொலர்) கணக்கின் செயற்பாடுகள் கீழே பொழிப்பாக்கப்பட்டுள்ளன.

| விபரங்கள் | | யூஎஸ்டொலர் | | ரூபா |
|---|---|---|---|---|
| 2013 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | | 1,172,530 | | 149,099,855 |
| கூட்டு: மீள்நிரப்பல்கள் | | 7,515,059 | | 957,895,614 |
| வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் | | - | | 13,603,946 |
| | | 8,687,589 | | 1,120,599,415 |
| கழி<br>பற்றுதல்கள் (எவ்ஏ) | 8,135,551 | | 1,048,531,310 | |
| பற்றுதல்கள் (ஆர்எவ்ஏ) | 98,908 | 8,234,459 | 12,820,039 | 1,061,351,349 |
| 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | | 453,130 | | 59,248,066 |

## 5. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 5.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதிகளின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதான நிதிகளின் பயன்பாடு மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான உள்ளவாறான திரண்ட செலவினம் தொடர்பான முக்கிய சில புள்ளிவிபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| மூலம் | நிதியளிப்பு உடன்படிக கையில் நிதியளிப்பதற்கு உடன்பட்ட தொகை | | 2013 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பாதீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | ஆண்டின் போது பயன்படுத்தப்பட்ட நிதிகள் | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்திய நிதிகள் | |
|---|---|---|---|---|---|---|---|
| | யூ.எஸ். டொலர் மில் | ரூபா. மில் | ரூபா. மில் | யூ.எஸ். டொலர் மில் | ரூபா. மில் | யூ.எஸ். டொலர் மில் | ரூபா. மில் |
| ஐடிஏ | 20 | 2,000 | 1,090 | 8.149 | 1,059.47 | 14.5 | 1,885.00 |
| இலங்கை அரசாங்கம் | - | - | 3 | - | 2.11 | - | 7.54 |
| **மொத்தம்** | **20** | **2,000** | **1,093** | **8.149** | **1,061.58*** | **14.5** | **1,892.54*** |

* அட்டுறு செலவினத்தின் கணக்கீடு காரணமாக இந்த அறிக்கையின் 4.1 ஆம் பந்தியில் காட்டப்படட்ட தொகைளிலிருந்து இத்தொகைகள் வேறுபடுகின்றன.

## 5.2 பௌதீக செயலாற்றல்

### 5.2.1 நிர்மாண வேலைகளின் முன்னேற்றம்

செயற்திட்டமானது கிழக்கு மாகாணத்தில் 56.15 கிமீ நீளமான மாகாண வீதிகளை புனரமைப்பதற்கு 05 பொதிகளின் கீழ் ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டதுடன் அதில், 04 பொதிகளின் புனரமைப்பு வேலைகள் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணிசமானளவு பூர்த்திசெய்யப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், பொதி – 07 இன் கீழான மாகாண வீதிகளின் புனரமைப்பு வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருக்காததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பௌதீக முன்னேற்றம் 13 சதவீதமாக இருந்தது. செயற்திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்ட வீதிகள் மீது மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பொதி ஈபி- 01 இன் கீழான மல்வத்தை- சுரிப்போடை வீதி நிர்மாணம்

(i) முனைப் பட்டியலை பின்பற்றுவதற்கும் அதேநேரம் இந்த வீதிப் பொதியின் கீழ் கரைகளின் நிர்மாணங்களை மேற்கொள்வதற்கும் ஆலோசனையாளர் வேண்டப்பட்டிருந்த போதிலும் அங்கு சீஎச் 0+000 மற்றும் சீஎச் 5+160 இடங்களில் சரிவு போதியதாக இல்லாமலும் இரண்டு பக்கங்களிலும் இறுக்கமில்லாமலும் இருந்ததென 2014 மே 28 இல் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையில் அவதானிக்கப்பட்டதுடன் ஒழுங்கற்ற இடைவெளிகளில் அரிப்புகள் இடம்பெற்றிருந்தன. எவ்வாறாயினும், மேற்குறிப்பிட்ட குறைபாடுகளை திருத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) சீஎச் 0+550 -0+575, சீஎச் 0+600, சீள் 0+660, சீஎச் 0+710, சீஎச் 0+726 மற்றும் சீஎச் 0+800-0+810 போன்ற அத்தகைய இடங்களின் மேற்பரப்பில் இரட்டு தடவையாக வேலைகளில் (டிபீஎஸ்ரீ) நிர்மாணத்தில் மிதமான உள்ளக கசிவுகள் இருந்தன.

(iii) இணைக்கும் பகுதியில் அஸ்பல்ற் நடைபாதை வெட்டப்பட்டிருக்க வேண்டியதுடன் மேற்பார்வை ஆலோசனையாளரால் அறிவுறுத்தப்பட்டவாறு சீஎச் 4+920 (பாலம்) இல் எபோச்சி மோட்டார் மற்றும் இணைப்பு சலாகையுடன் பதிலீடு செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், இதன்படி மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iv) நிர்மாண வேலைகள் 100 நாட்களால் தாமதப்பட்டிருந்த போதிலும், அறவிடப்பட்டிருக்க வேண்டிய ரூபா 39,789,823 தொகையான தாமதக் கட்டணங்களில் 2014 மே 28 ஆன கணக்காய்வு திகதிவரை பட்டியல் கொடுப்பனவுகளிலிருந்து ரூபா 18,829,229 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

(v) ஆலோசனையாளரிடமிருந்து அங்கீகாரம் பெற்ற பின்னர் செயற்திட்டத்திற்கு 2013 ஒத்தோபர் 30 இல் ‘‘கட்டிய வடிவமைப்பாக’’ இரண்டு தொகுதிகள் ஒப்பந்தகாரரால் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் ஒப்பந்தகாரரால் ஏழு மாத காலம் கடந்திருந்த போதும் 2014 மே 28 ஆன கணக்காய்வு திகதி வரையும் அத்தகைய வடிவமைப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) செயற்திட்டமானது இரண்டு பாலங்களின் நிர்மாண நோக்கெல்லையை பின்னர் கணிசமாளனவு மாற்றியிருந்தது. இதன் விளைவாக, ஒப்பந்தகாரர் நோக்கெல்லையின் மாற்றங்களிற்காகவும் வேலைகள் பூர்த்தியாக்கல் காலத்தை விஞ்சியதற்காகவும் மேலதிகமாக ரூபா 2,894,646 தொகையை கோரியிருந்தார். செயற்திட்ட பணிப்பாளரின் கருத்துப்படி, இவ்விடயம் நடுவர் தீர்ப்புக்கு தொடர்புபடுத்தப்பட்டது.

(ஆ) பொதி ஈபி -02 இன் கீழான வீதிகளின் நிர்மாணம்

---

(i) விலினியடி வீதி

---

சீஎச் 0+390, சீஎச் 0+424, சீஎச் 1+150, சீஎச் 1+290, சீஎச் 2+924 மற்றும் சீஎச் 3+540 போன்ற இடங்களில் நடைபாதை கொங்றீட் பூச்சில் வெடிப்புக்கள் உள்ளதுடன் ஆலோசனையாளர் வீ- வெட்டு மற்றும்

எபோச்சி மோட்டாரால் அந்த வெடிப்புக்களை திருத்துவதற்கு ஒந்தகாரரை வேண்டியிருந்தார். எவ்வாறாயினும், இதன்படி திருத்தப்பட்டிருக்கவில்லை. செயற்திட்ட பணிப்பாளரின் கருத்துப்படி, ஒப்பந்தகாரர் வெடிப்புக்களை திருத்துவதற்கு ‘‘பார் சமப்பாட்டினை’’ பயன்படுத்தியிருந்ததுடன் தற்போது அவதானிப்பகள் மற்றும் கண்காணிப்பின் கீழ் இருக்கிறது என்பதாகும்.

(ii) காரைதீவு வீதி

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- சீஎச் 0+300, சீஎச் 0+460, சீஎச் 0+490, சீஎச் 0+740, சீஎச் 0+760, சீஎச் 0+790, சீஎச் 0+805, சீஎச் 0+916, சீஎச் 0+920, மற்றும் சீஎச் 2+055 போன்ற இடங்களில் சக்கரப் பாதையில் முழு மேவுகையும் சேதமடைந்திருந்தன.

- சீஎச் 0+200, மற்றும் சீஎச் 0+200 ஆகிய இடங்களில் மிதமான கசிவுகள் இருந்தன.

(iii) நிந்தாவூர் வீதி

ரூபா 14,928,240 தொகையில் மதிப்பிடப்பட்டிருந்த 700 மீற்றர் நீளமான வீதியின் நடுப்பகுதியில் காணியின் எல்லைச் சுவர் மீள பொருத்துவதற்கான காணித்துண்டுகளை நன்னொடையளிப்பதற்கு ஆதன உடமையாளர்களின் தகராறு காரணமாக நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, வீதியானது 6 மீற்றர் அகலத்திற்குப் பதிலாக 4.5 மீற்றர் அகலத்திற்காக வடிவமைக்கப்பட்டிருந்தது.

(iv) ஒப்பந்தகாரர் ஆலோசனையாளரிடமிருந்து அங்கீகாரம் பெற்ற பின்னர் செயற்திட்டத்திற்கு 2013 நவம்பர் 23 இல் ‘‘கட்டிய வடிவமைப்பாக’’ இரண்டு தொகுதிகளை சர்ப்பிக்க வேண்டிய போதிலும் ஒப்பந்தகாரர் 2014 ஏப்ரல் 29 இலேயே அத்தகைய வடிவமைப்புக்களை சமர்ப்பித்திருந்தார்.

(v) செயற்திட்டமானது 227 நாட்களாக ஒப்பந்தகராரருக்கு பட்டியல் கொடுப்பனவை தாமதப்படுத்தியிருந்தது. ஆகவே, ஒப்பந்தகாரர் தாமத்தக் கட்டணங்களாக ரூபா 1,583,054 தொகையை கோரியிருந்தார்.

(இ) பொதி ஈபி- 04 இன் கீழான வீதிகளின் நிர்மாணம்

(i) தமன்ன – பன்னலகாம – அம்பலான் ஓயா வீதி

இரட்டைக் பிற்றுமினாஸ் மேற்பரப்பு வேலைகள் (டிபீஎஸ்ரீ) தொடர்பில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

- சீஎச் 04+360 மற்றும் சீச் 04+375 இடங்களில் 10 மிமீ அளவு மேற்பரப்பில் வெடிப்புக்கள் மற்றும் பள்ளமடைந்திருந்தமை.
- பல இடங்களில் மேற்பரப்பு கடுந்தரையாக இருந்தது.
- சீஎச் 11+200 மற்றும் சீச் 11+460 இடங்களின் இருபக்கமும் போதியளவு மணல் நிரப்படப்படவில்லை.
- சீஎச் 21+640 மற்றும் சீச் 21+790 இடங்களில் ஏற்ற இறக்கம் மற்றும் குழிகள் இருந்தன.

(ii) ஒப்பந்தகாரர் ஆலோசனையாளரிடமிருந்து அங்கீகாரம் பெற்ற பின்னர் செயற்திட்டத்திற்கு 2013 ஒக்தோபர் 16 இல் ‘‘கட்டிய வடிவமைப்பின்’’ இரண்டு தொகுதிகளை சர்ப்பிக்க வேண்டிய போதிலும் ஒப்பந்தகாரர் 2014 ஏப்ரல் 29 இலேயே அத்தகைய வடிவமைப்புக்களை சமர்ப்பித்திருந்தார்.

(iii) செயற்திட்டமானது 101 நாட்களாக ஒப்பந்தகராரருக்கு பட்டியல் கொடுப்பனவை தாமதப்படுத்தியிருந்தது. ஆகவே, ஒப்பந்தகாரர் தாமத்தக் கட்டணங்களாக ரூபா 1,764,435 தொகையை கோரியிருந்தார்.

(ஈ) பொதி ஈபி- 07 இன் கீழான வீகளின் நிர்மாணம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சமதரையாகவுள்ள பகுதியாக வீதி தெரிவுசெய்தலிற்காக முறைப்படி சாத்தியவள கற்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் மத்திய கடல் மட்ட ஏற்றத்தில் (எம்எஸ்எல்) 2-3 மீற்றர்களிற்கு இடையில் வேறுபாடு உள்ளதுடன், நில நீர் மட்டம் உயர்வாக உள்ளதுடன் சிறு மழைபெய்யினும் பெருமளவு வெளளம் ஏற்படும். இதன் விளைவாக, வடிந்தோடும் வெள்ளப்பெருக்கிற்கு சாத்தியமாக உள்ளதுடன் இது வீதியை பாரியளவு சேதமாக்கும்.

(ii) ஆரம்ப வேலைத்திட்டத்தின் படி, இந்த வீதி நிர்மாணம் தொடர்பான நில வேலைகள் 2014 மார்ச் 25 இல் தொங்கப்பட்டிருக்க வேண்டும்.

எவ்வாறாயினும், நில வேலைகள் 2014 ஏப்ரல் 30 வரை தொடங்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீட்டுப் பதிவேடுகளின் பேணுகை

(ஆ) ஒப்பந்த நிர்வாகம்